செய்தி வெளியீடு எண் : 37 நாள் :20.06.2020

## செய்தி குறிப்பு

**சுதந்திர தின விழா 2020 அன்று மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக சிறப்பாக சேவைபுரிந்தவர்கள் / நிறுவனங்களுக்கு தமிழக அரசின் விருதுகள் வழங்கப்படவுள்ளதால் தகுதியானவர்கள் விண்ணப்பிக்கலாம் தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தகவல்:-**

தமிழக்கத்தில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கான தொண்டு நிறுவனங்கள் மற்றும் சேவைபுரிபவர்கள், சிறப்பாக சேவைபுரிய வேண்டும் என்ற ஆர்வத்தை ஏற்படுத்தும் நோக்கத்தோடு, அவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் சுதந்திர தின விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படுகிறது. இந்த ஆண்டும் 15.08.2020 அன்று நடைபெறவுள்ள சுதந்திர தின விழாவில் தமிழக அளவில் சிறப்பாக சேவைபுரிபவர்கள் மற்றும் நிறுவனங்கள் தேர்வுக் குழு மூலம் தேர்வு செய்யப்பட்டு, தேர்ந்தெடுக்கப்படும் விருதாளர்களுக்கு கீழ்காணும் விருதுகள் வழங்கப்படவுள்ளது.

| வ.எண் | விருதின் வகை | விருதின் வகை |
|---|---|---|
| 1 | மாற்றுத்திறனாளிகளுக்கு சேவை புரிந்த சிறந்த தொண்டு நிறுவனம் | 10 கிராம் எடையுள்ள தங்கப்பதக்கம்,ரூ.50,000/- ரொக்கப்பரிசு மற்றும் சான்றிதழ். |
| 2 | மாற்றுத்திறனாளிகளுக்கு சேவை புரிந்த சிறந்த மருத்துவர் | 10 கிராம் எடையுள்ள தங்கப்பதக்கம் மற்றும் சான்றிதழ். |
| 3 | மாற்றுத்திறனாளிகளுக்கு மிக அதிக அளவில் வேவைவாய்ப்பு அளித்த தனியார் நிறுவனம் | 10 கிராம் எடையுள்ள தங்கப்பதக்கம் மற்றும் சான்றிதழ். |
| 4 | மாற்றுத்திறனாளிகளுக்கு சேவை புரிந்த சிறந்த சமூக பணியாளர் | 10 கிராம் எடையுள்ள தங்கப்பதக்கம் மற்றும் சான்றிதழ். |
| 5 | சிறந்த மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி | 10 கிராம் எடையுள்ள தங்கப்பதக்கம் மற்றும் சான்றிதழ். |

மேற்காணும் விருதுகளுக்கான விண்ணப்ப படிவங்களை, மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர், மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரகம், லேடி வெலிங்டன் கல்லூரி வளாகம், காமராஜர் சாலை, சென்னை - 5 அல்லது மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் ஆகியோரிடமிருந்து பெற்று பூர்த்தி செய்து உரிய அனைத்து சான்றிதழ்களுடன் 26.06.2020 அன்று பிற்பகல் 5.30 மணிக்குள் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர், தேனி அவர்களிடம் நேரிலோ அல்லது தபால் மூலமாக விண்ணப்பித்து பயனடையுமாறு தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**